வழக்குகளில் அக்கறை எடுத்துக்கொண்டு தங்கள் திறமையைக் காட்டு வார்கள் என்று நம்புகிறேன்.

Formation of a road from Palani to Kodaikanal

* 802. *Q.*—Srimathi A. S. PONNAMMAL (on behalf of Sri P. S. K. LAKSHMIPATHI RAJ): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து கொடைக்கானலுக்கு ரோடு போடுவது சம்பந்த மாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானல், எந்தப் பகுதி வழியாக ரோடு போடும் உத்தேசம் இருக்கிறது ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: (*a*) & (*b*) The matter is under consideration.

Srimathi A. S. PONNAMMAL: இந்த மாதிரி கொடைக் கானலுக்கும் பழனிக்குமிடையே ரோடு போடுவதாயிருந்தால் அது எத்தனை மைல் தூரம் இருக்கும், அதற்கு சர்க்கார் எவ்வளவு பணம் செல வழிக்கும் ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: இந்தக் குறுக்குப் பாதை 28 மைல் தூரம் இருக்கும். இதைப் போட 38 லட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

Srimathi A. S. PONNAMMAL: இந்த ரோடைப் போடும் வேலையை வெகு விரைவில் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: நான் முதலில் கூறியபடி இத்திட்டம் ஆலோசனையில் இருக்கிறது.

Headquarters Hospital, Vellore

* 803 *Q.*—Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI): கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வேலூர் தலைமை மருத்துவ நிலையத்தில் 1958-ல் சராசரி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள் (In-patients) எவ்வளவு பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU: 420 per day, Sir.

Procurement of foodgrains

* 804 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ராஜாங்க உணவு தான்ய வர்த்தக திட்டத்தின் கீழ் தான்யக் கொள் முதல் செய்வதற்காக எந்தெந்த இடங்களிலிருக்கும் கூட்டுறவு சொசைட்டி களுக்கு சென்னை ராஜ்யத்தில் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The Government have decided to procure two lakhs tons of rice during the current harvest and the following co-operatives in the State have been appointed as procuring agents :—

(1) The District Co-operative Supply and Marketing Societies or the Co-operative Wholesale Stores in all the districts except Tanjore;